முழுப் பதிப்புரிமையுடையது

**இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்**

# AA3 பரீட்சை – 2020 சனவரி

# (AA34) செயன்முறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு

(Processes, Controls and Audit)

2020-01-18
பிற்பகல்
[1.45 – 5.00]

பக்கங்கள் : 07
வினாக்கள் : 09

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***

(3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*

(5) *நிரற்படுத்தப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை மாத்திரம் அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொற்களின் நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் நிரலிற் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

**குமாரும் முதித்தவும்** வியாபார நிருவாகத்தில் பட்டம் பெற்ற நண்பர்களாவர். அவர்கள் தமது பல்கலைக்கழகத்திற்கு அருகில் காகிதாதிகளை இறக்குமதி செய்து விற்பனை செய்யும் வியாபாரத்தை ஆரம்பிப்பதற்குத் தீர்மானித்துள்ளனர்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) **குமாரும் முதித்தவும்** தமது வியாபாரத்தினைத் தொடங்கத் தாபிக்கக்கூடிய பொருத்தமான இரண்டு (02) வகை வியாபார அமைப்புகளை **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(b) மேற்படி வியாபாரத்தைப் பாதிக்கக்கூடிய மூன்று (03) பொருளாதாரக் காரணிகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

### வினா 02

தொடர்ந்தியங்கும் தாபனக் கோட்பாட்டின்கீழ், உரிமம் ஒரு தொடர்ந்தியங்கும் தாபனமாக, எதிர்வுகூறக் கூடிய காலம் வரை அதன் தொழிற்பாடுகளைத் தொடரும் எனும் எடுகோளின்மீது, நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன.

**நீங்கள் செய்யவேண்டியது:**

உரிமமொன்று தொடர்ந்தியங்கும் தாபனமாக தொடர்வதற்குக் கணிசமான சந்தேகத்தினை ஏற்படுத்தக்கூடிய நிதிசார்ந்த நிகழ்வுகள் அல்லது புறநிலைகளுக்கு மூன்று (03) உதாரணங்களையும் தொழிற்பாட்டு நிகழ்வுகள் அல்லது புறநிலைகளுக்கு இரண்டு (02) உதாரணங்களையும் **நிரற்படுத்துக.** (05 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட HS ஹோல்டிங்ஸ் கம்பனியின்** 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைக் கணக்காய்வு செய்யும் அணியின் ஒரு சிரேட்ட கணக்காய்வு அலுவலர் **சிவா.**

உறவுமுறைத் தரப்பினரின் ஊடுசெயல்கள் தொடர்பில் **சிவா** கீழ்வரும் கணக்காய்வு விதிமுறைகளைச் செய்திருந்தார்:

- முன்னைய ஆண்டின் வேலைத்தாள்களின் மீளாய்வு
- பணிப்பாளர் சபைக் கூட்டக் குறிப்புகளின் மீளாய்வு

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) சகல பொருண்மையான உறவுமுறைத் தரப்பினர் ஊடுசெயல்களையும் கணக்காய்வாளர் கண்டுபிடிக்க எதிர்பார்க்க முடியாத இரண்டு (02) சந்தர்ப்பங்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) உறவுமுறைத் தரப்பினர் ஊடுசெயல்களைக் கணக்காய்வு செய்யும்போது **சிவா** மேற்கொள்ளக்கூடிய மேலே குறிப்பிட்ட இரண்டையும் தவிர்ந்த மூன்று (03) கணக்காய்வு விதிமுறைகளை **நிரற்படுத்துக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

பட்டயக் கணக்காளர் நிறுவனமான **W. அசோசியேற்ஸ்** நிறுவன மட்டத்திலும் தனித்தனிக் கணக்காய்வு ஈடுபடுத்தல் மட்டத்திலும் தரக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றினைத் தாபித்துப் பேணி வருகிறது. **W அசோசியேற்ஸின்** கணக்காய்வு முகாமையாளராக நீங்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் கணக்காய்வுப் பயிலுநர்களால் செய்யப்படும் வேலைகளை நீங்கள் மீளாய்வு செய்கிறீர்கள்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) கணக்காய்வு ஈடுபடுத்தலை மேற்கொள்ளும்போது ''மீளாய்வின்'' கீழ் உட்படுத்தப்படும் இரண்டு (02) செயற்பாடுகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) நிறுவன மட்டத்தில் பேணப்படும் தரக் கட்டுப்பாட்டு முறைமையின் மூன்று (03) மூலகங்களைக் (elements) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

பகுதி *A* முடிவு

# <u>பகுதி B</u>

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் என்பது அடிப்படை விடயத் தகவல்கள் தொடர்பில், பொறுப்பு வாய்ந்த தரப்பினரைவிட எதிர்பார்க்கப்படும் பயனாளிகளின் நம்பிக்கை அளவினை மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு தீர்மானத்தை வெளிப்படுத்தும் பொருட்டு போதுமான, பொருத்தமான சான்றுகளைப் பயிற்சியாளர் பெற்றுக் கொள்வதற்கான நோக்கத்தைக் கொண்ட ஈடுபடுத்தல் ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) போதுமான, பொருத்தமான சான்று என்பதனால் கருதப்படுவது என்ன என **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல்களை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் தொடர்வது தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய மூன்று (03) பிரதான தேவைப்பாடுகளை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

நீங்கள், 2019 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட சாரா டிரேடர்ஸ் (தனி) கம்பனியின்** நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்யும் பட்டயக் கணக்கறிஞர் நிறுவனமான **ஜோர்ச் அசோசியேற்றின்** கணக்காய்வுக்குப் பொறுப்பான சிரேட்ட அலுவலராவீர்கள். கணக்காய்வுக் கோப்பில் கீழ்வரும் தகவல்கள் உட்படுத்தப்பட்டிருந்தன:

(1) திட்டமிடற் கட்டத்தில் பயன்படுத்திய கணக்காய்வுப் பொருண்மை (audit materiality) இலாப அடிப்படையில் ரூபா 1,700,000/- ஆகும்.

(2) கம்பனியானது 2019 அக்டோபர் 01 இல் அலுவலகக் கட்டடமொன்றின் நிருமாணத்தைப் பூர்த்தி செய்ததுடன் அக்கட்டடம் அதே திகதியில் பயன்பாட்டிற்குக் கிடைக்கக்கூடியதாகவும் இருந்தது. கட்டடத்தின் நிருமாணக் கிரயம் ரூபா 120 மில்லியன் ஆகும்.

(3) கட்டடங்கள் கிரயத்தில், நேர்கோட்டு அடிப்படையில் 30 ஆண்டுகள் ஈறாக தேய்மானம் செய்யப் படுகிறது.

(4) இந்தப் புதிய கட்டடம் 2020 சனவரி 01 ஆந் திகதி திறந்து வைக்கப்பட்டு அன்றிலிருந்து கம்பனியினால் தேய்மானம் அறவிடப்பட்டது.

(5) கம்பனி இந்தப் புதிய கட்டடம் மீது 2019 அக்டோபர் 01 ஆந் திகதியில் இருந்து 2019 டிசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்திற்கான கடன்படுகைக் கிரயம் ரூபா 1.5 மில்லியனை மூலதனப்படுத்தி யிருந்தது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) 2019 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட சாரா டிரேடிங் (தனி) கம்பனியின்** நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு அபிப்பிராயம் மீதான மேற்படி விடயங்களை **மதிப்பிடுக.** (06 புள்ளிகள்)

(b) கணக்காய்வாளர் போதிய, பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற முடியாதவிடத்து வழங்கக்கூடிய கணக்காய்வு அபிப்பிராய வகையினை **ஏற்பிசைவு செய்க.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

(A) **வரையறுக்கப்பட்ட மஹேல (தனி) கம்பனியானது** கடந்த நிதியாண்டிற்கான கணக்காய்வு அறிக்கையை வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக தற்போதைய கணக்காய்வாளரை (**RS அசோசியேற்ஸ்**) மாற்றுவது பற்றிக் கவனத்தில் கொண்டுள்ளதுடன் **மஹேல கம்பனியின்** முகாமைப் பணிப்பாளர் 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வினை மேற்கொள்வதற்கான கம்பனியின் சட்டநியதிக் கணக்காய்வாளராக நியமிப்பதற்கு **TM அசோசியேற்ஸ்** உடன் கலந்தாலோசித்து வருகின்றார்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) தற்போதைய கணக்காய்வாளரை **(RS அசோசியேற்ஸ்)** மாற்றீடு செய்யும்போது **வரையறுக்கப்பட்ட மஹேல (தனி) கம்பனி** கடைப்பிடிக்க வேண்டிய இரண்டு (02) விதிமுறைகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) சட்டநியதிக் கணக்காய்வாளராக நியமனத்தை ஏற்றுக்கொண்ட பின்னர் **TM அசோசியேற்ஸ்** மேற்கொள்ள வேண்டிய இரண்டு (02) விதிமுறைகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(B) அந்தரங்கம் பேணுதல் கோட்பாடானது தொழில்சார் அல்லது வியாபாரத் தொடர்பு காரணமாக தொழில்சார் கணக்காளர்கள் பெற்றுக்கொள்ளும் அந்தரங்கத் தகவல்களை தமது தனிப்பட்ட அனுகூலத்திற்காகவோ அல்லது மூன்றாம் தரப்பினரின் அனுகூலத்திற்காகவோ பாவிப்பதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டுமெனும் கடப்பாட்டினைச் சகல தொழில்சார் கணக்காளர்கள் மீதும் விதிக்கின்றது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

தொழில்சார் கணக்காளர்கள் அந்தரங்கத் தகவல்களை வெளிப்படுத்த வேண்டியிருக்கக்கூடிய இரண்டு (02) சந்தர்ப்பங்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

பகுதி *B* முடிவு

## <u>பகுதி C</u>

இரண்டு (02) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 08

***நிலாஷி*** அண்மையில் **HL ஹோட்டல்ஸ் PLC** யின் உதவிக் கணக்காளராக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார். வேலைக்கு அறிமுகப்படுத்துகின்ற நிகழ்ச்சித்திட்டத்தின்போது ஹோட்டல் முகாமைத்துவத்தில் ஈடுபடாத கிட்டத்தட்ட 10,000 பங்குதாரர்கள் கம்பனியில் இருப்பதை **நிலாஷி** அவதானித்தார். பணிப்பாளர் சபையானது கம்பனியின் பங்குதாரர்களால் நியமிக்கப்பட்ட 5 பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது.

வேலைக்கு அறிமுகப்படுத்துகின்ற நிகழ்ச்சித்திட்டத்தின் பின்னர், கணக்காளர் **நிலாஷிக்கு** பணி விபரங்கள் (job description) பற்றித் தெரிவித்ததுடன் ஹோட்டலின் பெறுகை (procurement) செயன்முறை பற்றிய கீழ்வரும் விபரங்களையும் தெரிவித்தார்:

- சகல மூலதனத் தன்மை கொண்ட உருப்படிகளும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் கொள்வனவு செய்யப்படுகின்றன.
- சகல உருப்படிகளுக்கும் பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்கள் உள்ளனர். விலை மாற்றங்கள் ஏதுமிருப்பின் அவற்றைப் பெறுகைக் குழுவின் ஊடாக நிதி முகாமையாளர் அங்கீகரித்தாலன்றி உருப்படிகளின் விலைகள் மாற்றப்படாது.
- தொக்குகளுக்குத் தேவை ஏற்படும்போது முறைமை பிறப்பிக்கும் கோரிக்கைக் குறிப்புகள் [Request Notes (RNs)] மூலமாக களஞ்சிய முகாமையாளருக்குத் தெரிவிக்கப்படும். இந்தக் கோரிக்கைக் குறிப்புகள் உரிய பிரிவுத் தலைவரினால் அங்கீகரிக்கப்படுகின்றன.
- முறைமை பிறப்பிக்கின்ற கொள்வனவுக் கட்டளைகள் (POs) உதவிக் கணக்காளரால் தயாரிக்கப் படுகின்றன. பெறுமதியானது ரூபா 200,000/- இலும் குறைந்ததாக இருக்கும்போது கணக்காளராலும் பெறுமதியானது ரூபா 1,000,000/- வரையில் நிதி முகாமையாளராலும் அங்கீகரிக்கப்படுகின்றன.
- உருப்படிகளைப் பெற்றுக்கொள்ளும் தறுவாயில் களஞ்சிய எழுதுநரால் பொருட் பெறுகைக் குறிப்புகள் (GRNs) தயாரிக்கப்பட்டு, அவை அதே நாளில் கணினி முறைமையில் பதிவு செய்யப்படுகின்றன.
- வழங்குநர்களின் விலைப்பட்டியல்களுக்குக் கொடுப்பனவு மேற்கொள்ளும்போது கொடுப்பனவு உறுதிச்சீட்டு (payment voucher) தயாரிக்கப்பட முன்னதாக அது உதவிக் கணக்காளரால் PO மற்றும் GRN உடன் ஒப்பிடப்பட்டு இணங்கப்படுதல் வேண்டும்.
- கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் அங்கீகரிக்கப்பட்டு, விதிக்கப்பட்ட வரையறைகளுக்கு அமைய காசோலைகள் உரிய கையொப்பமிடுநரால் கையொப்பமிடப்படுகிறது.

கம்பனி அதன் நிதி அறிக்கையிடலுக்கு கணினிமயப்படுத்திய கணக்கீட்டு முறைமையைப் பயன்படுத்துகிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) கூட்டிணைவு ஆளுகைக்கான (corporate governance) சிறந்த நடைமுறைக் கோவையில் கோடிட்டுக் காட்டப்பட்டவாறு பணிப்பாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நான்கு (04) வழிகாட்டல்களைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) இலங்கையில் நிரற்படுத்தப்பட்ட உரிமங்களுக்குப் பொருந்தக்கூடிய கூட்டிணைவு ஆளுகை வழிகாட்டல்களுக்கு அமைய **HL ஹோட்டல்ஸ் PLC** தாபிக்க வேண்டிய இரண்டு (02) குழுக்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(c) **HL ஹோட்டல்ஸ் PLC** யின் பெறுகைச் செயன்முறையிலுள்ள ஐந்து (05) பலங்களை (strengths) **இனங்காண்க.** (05 புள்ளிகள்)

(d) மேலே (c) இல் இனங்காணப்பட்ட அத்தகைய பலங்கள் ஒவ்வொன்றினதும் நோக்கங்கள் ஒவ்வொன்றைக் **குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

(e) **HL ஹோட்டல்ஸ் PLC** தாபிக்க வேண்டிய கட்டுப்பாட்டுச் சூழலின் இரண்டு (02) மூலகங்களையும் மூன்று (03) கட்டுப்பாட்டு செயற்பாடுகளையும் **நிரற்படுத்துக.** (05 புள்ளிகள்)

(f) தரவுக் கோப்புகளுக்கு அதிகாரமளிக்கப்படாத திருத்தங்களை தடை செய்வதற்கு கிடைக்கப்பெறும் இரண்டு (02) பொதுக் கட்டுப்பாடுகளையும் உள்ளீடுகளின் துல்லியத்தன்மையை (செம்மையை) கட்டுப்படுத்துவதற்கு கிடைக்கப்பெறும் இரண்டு (02) பிரயோகக் கட்டுப்பாடுகளையும் **நிரற்படுத்துக.**
(04 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

(A) நீங்கள் துணிகளை உற்பத்தி செய்து உள்ளூர்ச் சந்தையில் விற்பனை செய்யும் **சிறினா பப்றிக்ஸ் PLC** யின் சட்டநியதிக் கணக்காய்வுக்குப் பொறுப்பான சிரேட்ட அலுவலராவீர்கள். கம்பனி பற்றிய தகவல்கள் அதன் இணையத்தளத்தில் கிடைக்கப்பெறும். கணக்காய்வு ஈடுபடுத்தல் தொடர்புபட்ட கீழ்வரும் தகவல்கள் கணக்காய்வுத் திட்டமிடல் ஞாபகக் குறிப்பிலிருந்தும் (memo) 2019 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டிற்கான கணக்காய்வு தொடர்புபட்ட வேலைத் தாள்களிலிருந்தும் பிரித்தறியப்பட்டன:

- கம்பனியின் கடன்பட்டோர் கம்பனி வாடிக்கையாளராக உள்ளதுடன் அவர்களுக்கு 30 நாள் கடன் காலம் வழங்கப்படுகிறது.
- 2019 டிசெம்பர் 31 ஆந் திகதிய நிதிக் கூற்றுக்களில் காணப்பட்ட கடன்பட்டோர் மீதி ரூபா 128 மில்லியன் ஆகும்.
- 2019 டிசெம்பர் 31 இல் கடன்பட்டோர் காலப் பகுப்பாய்வு கீழ்வருமாறு:

| 30 நாட்களுக்குக் குறைவாக (ரூ. மில்லியனில்) | 30 – 60 நாட்கள் (ரூ. மில்லியனில்) | 60 – 90 நாட்கள் (ரூ. மில்லியனில்) | 90 – 365 நாட்கள் (ரூ. மில்லியனில்) | 365 நாட்களுக்கு மேலாக (ரூ. மில்லியனில்) |
|---|---|---|---|---|
| 28 | 12 | 32 | 48 | 08 |

- 2019 டிசெம்பர் 31 இல் ரூபா 80 மில்லியன் நிலுவையாகக் கொண்டிருந்த கடன்பட்டோர் ஒருவரின் கட்டளைகள், வியாபார மீள்கட்டமைப்புக் காரணமாக, கணிசமாகக் குறைந்திருந்தமை 2020 சனவரி 10 ஆந் திகதியில் தெரியவந்தது.

- அதனைத் தொடர்ந்து, 2020 சனவரி 15 ஆந் திகதி வரையில் ரூபா 1.5 மில்லியன் மாத்திரம் கடன்பட்டோரிடமிருந்து கிடைக்கப்பெற்றன.

- 365 நாட்களுக்கு மேலாக நிலுவையிலுள்ள கடன்பட்டோர் மீதிகளுக்கு 100 % ஐயுறவுக்கடன் ஏற்பாடு (impairment provision) செய்யப்பட்டது.

- வாடிக்கையாளர்களிடமிருந்து கட்டளைகளை விற்பனை நிறைவேற்று அலுவலர் பெற்றுக் கொண்டு விலைப்பட்டியலைத் (invoice) தயாரிப்பதற்காக அவை மின்னஞ்சல் ஊடாக கணக்குகள் நிறைவேற்று அலுவலருக்குத் தெரியப்படுத்தப்படுகிறது. வருமானமானது அதே நேரத்திலேயே ஏற்பிசைவு செய்யப்படுகிறது.

- வாடிக்கையாளர்கள் கம்பனித் தொழிற்சாலையில் இருந்து பொருட்களைச் சேகரிக்கின்ற அதே நேரம் வாடிக்கையாளர்கள் பொருட்கள் கிடைக்கப்பெற்றுள்ளன என்பதை ஒப்புகை செய்கின்ற விலைப்பட்டியல்களின் பிரதிகள் நிதிப் பிரிவுக்கு அனுப்பப்படுகின்றன.

- ஆண்டிற்கான பாதீட்டு விற்பனையை அடையும்பட்சத்தில் பிரதம நிறைவேற்று அதிகாரிக்கும் சிரேட்ட முகாமையாளர்களுக்கும் உபகாரக் கொடுப்பனவுகள் (bonus) செய்யப்படுகின்றன.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) கணக்காய்வுக்கு முறையான திட்டமிடல் ஏன் தேவைப்படுகிறது என்பதற்கான நான்கு (04) காரணங்களைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) ***சிறினா பப்றிக்ஸ்* PLC** தொடர்பில் விளக்கத்தினைப் (understanding) பெறுவதற்குப் பயன்படுத்தக்கூடிய ஐந்து (05) மூலங்களை (sources) **நிரற்படுத்துக.** (05 புள்ளிகள்)

(c) ***சிறினா பப்றிக்ஸ்* PLC** இன் கணக்காய்வு விதிமுறைகளை ஆற்றுவதில் நீங்கள் விசேட கவனம் செலுத்த வேண்டிய ஆறு (06) பகுதிகளை **இனங்காண்க.** (06 புள்ளிகள்)

(d) கடன்பட்டோர் மீதி தொடர்பான கணக்காய்வினை மேற்கொள்வதற்குத் தேவையான நான்கு (04) கணக்காய்வு விதிமுறைகளை **நிரற்படுத்துக.** (04 புள்ளிகள்)

(e) கணக்காய்வுச் சான்றினைப் பெறுவதற்கான கணக்காய்வு விதிமுறைகளின் மூன்று (03) வகைகளை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

பகுதி C முடிவு

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |